I.D. 28/2018
24-01-2024

W.W.2 ராஜேந்திரன்
குறுக்கு விசாரணை

எதிர்மனுதாரர் கழகம் அரசு கட்டுப்பாட்டில் இயங்கும் ஒரு நிறுவனம் என்றால் சரி. அதற்கென்று நிலையாணைகள் உண்டு என்றால் சரி. தவறு செய்யும் ஊழியர்களுக்கு ஒழுங்கு நடவடிக்கை எடுத்து அந்த நிலையாணையின் படி உள்விசாரணை நடத்தப்பட்டு தண்டனை வழங்கப்படும் என்றால் சரி. அந்த நிலையாணையின் படி சிறு தண்டனைக்கு உள்விசாரணை தேவையில்லை என்று உள்ளது என்பது பற்றி தெரியுமா என்றால் தெரியும். நீங்கள் இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு அங்கீகாரம் கடிதம் மனுதாரர் சங்கத்தினால் உங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் கொடுக்கப்பட்டுள்ளது. அந்த அங்கீகார கடிதத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை. நீங்கள் சொல்வது போல் உங்களுக்கு எந்த அதிகாரமும் கொடுக்கப்படவில்லை அதை நீங்கள் தாக்கல் செய்யவும் இல்லை. ஆகையால் உங்கள் சாட்சியம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. மனுதாரர் தொழிற்சங்கத்தில் நீங்கள் எந்த ஆண்டில் இருந்து உறுப்பினராராக உள்ளீர்கள் என்றால் 1997. அற்கான ஆதாரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நீங்கள் கட்டிய சந்தா ரசீது, உறுப்பினர் அடையாள அட்டை ஆகியவற்றை பார்த்தால் நீங்கள் எப்போது இருந்து உறுப்பினராக இருக்கிறீர்கள் என்பது தெரியவரும் என்றால் சரி. உங்கள் தொழிற்சங்கத்திற்கு என்று துணைவிதிகள் இருக்கிறதா என்றால் இருக்கிறது. (எதிர்மனுதாரர் வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

**சாட்சி திறந்த நீதிமன்றத்தில் கூறப்பட்டது கணிணியில் தட்டச்சரால் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பித்து அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டது.**

**தலைமை தாங்கும் அதிகாரி,**
**தொழிலாளர் நீதிமன்றம்,**
**திருச்சி**

Adope